

# அருமையான கனிகள்

## வருகைக்கு ஆயத்தமாக, கனி நிறைந்த வாழ்க்கை

இதழ் 4

"... என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக." உன்னதப்பாட்டு 4:16




சகோ. யோவான் காந்தி இரா
சுவிசேஷகர்
நங்கூர ஊழியங்கள்


Anchor Ministries


facebook.com/anchorministries
https://anchorministries.in
Call / Whatsapp/ Gpay 9840872799

# நம்மை மறந்தவர்கள்...

"ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டான்." - ஆதியாகமம் 40:23

இரண்டு வருஷம் சென்றபின்பு, ,... எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான். - ஆதியாகமம் 41:1, 43

கிறிஸ்துவுக்குள் ஐக்கியமானவர்களே! வாழ்த்துக்கள்!

நாம் பல நேரங்களில் நம்மை மறந்து போனவர்களை குறித்து வருத்தப்பட்டு கொண்டிருப்பது உண்டு. எத்தனை உதவிகள் நான் செய்தேன். ஆனால் என்னை மறந்து விட்டார்களே! என்று புலம்புவதும் உண்டு.

**சம்பவம் 1 –** இவன் பானப் பாத்திரக்காரனின் தலைவன் எகிப்து இராஜாவுக்கு குற்றம் செய்தவன். அதனால் கோபம் கொண்ட இராஜா சிறையில் அடைத்தான். அங்கு யோசேப்பு என்ற இளைஞனைக் கண்டான்.

ஒருநாள் பானப் பாத்திரக்காரனின் தலைவன் கனவு கண்டான். அந்த கனவின் அர்த்தத்தை யோசேப்பு வெளிப்படுத்தினான்.

அந்த கனவின் அர்த்தத்தின்படி பானப்பாத்திரத்



தலைவன் திரும்பவும் இராஜாவுக்கு பானம் கொடுக்க மீண்டும் உயர்த்துவார் என்று யோசேப்பு வெளிப்படுத்தினான். மேலும் பானப்பாத்திரக் காரனின் தலைவன் வாழ்வடைந்திருக்கும்போது தன்னை சிறையிலிருந்து விடுவிக்கக் கேட்டுக்கொண்டான்.

அதன்படி பானப்பாத்திரத் தலைவன் தன்னுடைய பணிக்கு திரும்பினான். ஆனால் யோசேப்பை மறந்துவிட்டான். (ஆதியாகமம் 40).

**சம்பவம் 2 –** இங்கு அகாஸ்வேரு ராஜாவின் 2 பிரதானிகளாகிய பிக்தானும், தேரேசும் (எஸ்தர் 2:21) இராஜாவை கொலை செய்ய வகை தேடினார்கள். இது மொர்தெகாய்க்கு தெரியவந்து எஸ்தர் ராணியிடம் கூறினார். இதை விசாரித்த போது உண்மை என்று கண்டு அவ்விருவரையும் தூக்கிலிடப்பட்டார்கள். இராஜாவைக் காப்பாற்றியவர் மொர்தேகாய். இது இராஜ சமூகத்திலே நாளாகமப் புத்தகத்திலே எழுதப்பட்டது. ஆனால் மொர்தேகாய்க்கு எந்தவித

பாராட்டும் தெரிவிக்க ராஜா மறந்தார் (எஸ்தர் 2:21-23)

பல நேரங்களில் நன்மை செய்து சோர்ந்து போயிருக்கும் சகோதர, சகோதரிகளே ! மனிதர்களுடைய இயல்பு நன்மை செய்வதை மறந்து விடுகிறது. ஆனாலும் தேவன் நம் பட்சமாக இருந்தால் மறந்து போனதையும் நமக்கு சாதகமாக மாற்றுவார். நாம் நன்மை செய்வதினிமித்தம் நம்மை உயர்த்துவார்.

ஒருவேளை நாம் நன்மை செய்த உடன் பலனை எதிர்பார்த்தால் பலன் சிறியதாக இருக்கலாம். மறந்து போன பானப்பாத்திரத் தலைவன் யோசேப்பை மறக்காமல் ராஜாவிடம் கூறி காப்பாற்றி இருந்தால் எகிப்தில் பிச்கைக் காரனாக இருந்திருப்பான். அல்லது யாக்கோபை (அப்பா) தேடிச் சொந்த வீட்டுக்கு போயிருக்க வேண்டும்.

அது அல்ல தேவனுடைய சித்தம் 18 வயதில் கனவு கண்டானே யோசேப்பு அது நிறைவேண்டும். அதனால் அவனை உயர்த்துவதற்காக பானப்பாத்திரத் தலைவனுக்கு மறதி ஏற்படுத்தினார்.

ராஜாவை காப்பாற்றியதற்காக மொர்தெகாய்க்கு பரிசுகள் கிடைத்திருக்கும். ஆனால் ஆமான் மொர்தெகாய்க்கு விரோதமாக தூக்குமேடை செய்து அதில் மொர்தெகாயை போட அனுமதி கேட்க வருவதற்கு முந்தைய நாள் ஆகாஸ்வேரு இராஜாவுக்கு தூக்கம் வராமல்,



நாளாக புத்தகத்தை வாசித்தபோது மொர்தெகாய் தன்னை காப்பாற்றியதை அறிந்து கொண்டார்.

தக்கசமயத்தில் தேவன் இராஜாவுக்கு ஞாபகப் படுத்தினார். ஆமான் மொர்தெகாயை தூக்கிலிடும்படி அனுமதி கேட்க வந்தான். ஆனால் இராஜாவோ மொர்தெகாய்க்கு ஆமானையே மரியாதை செலுத்த திருப்பி அனுப்பினார். அதற்கு காரணம் மொர்தெகாய் செய்த உதவி. இது தேவனால் உண்டான காரியம்.

ஒருவேளை நாம் கூட ஆபத்தில் சிக்க நேரிடும்போதும் நம்மை கொல்ல எதிரிகள் பலப்படும்போதும் தேவன் அங்கு செயல்பட்டு காரியத்தை மாறுதலாய் மாற்றுவார்.

தேவனுடைய ஜனமே தேவன் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்ற யாரையாவது

அனுப்புவார். அவர்கள் நம்மை மறந்தவர்களாகவும் இருக்கலாம்.

ஆதலால் நன்மை செய்ய நாம் சோர்ந்து போகாமல் இருப்போமாக. **“உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்” (பிரசங்கி 11:1)**


நம்மை மறந்தவர்கள் இப்போதைக்கு நம்மை மறந்தவர்களாவார்கள். அவர்களை தக்க சமயத்தில் ஞாபகப்படுத்தி தேவன் அனுப்புவார்.

கிறிஸ்துவின் இராஜ்யத்தைக்
கட்டும் சிற்பிகளில் ஒருவன்,
சகோ. **யோவான் காந்தி இரா**

## துதிக்க



✦ கெரோஸ் (Kairos) என்ற பெயரில் இளம் வாலிபர்களுக்கும், வாலிபர்களுக்கும் 2017ஆம் ஆண்டு இரண்டு நாள் கேம்ப் கூடுகை பரமன்கேணி TWR கேம்ப் சென்டரில், நடத்தினோம். 2018 (ஜுன் மற்றும் அக்டோபர் மாதத்தில்) ஒரு நாள் சிறப்பு கூடுகை 2 முறையும் புரசைவாக்கம் BKN சிறிய ஆடிட்டோரியத்தில், 2019 வருடம் ஜனவரியில் ஒரு நாள் சிறப்பு கூடுகை கூடுவாஞ் சேரியில் நடத்த கர்த்தர் கிருபை செய்தார். இதன் மூலம் அநேக வாலிபர்கள் தேவனண்டையில் வருவதற்கு கிருபை செய்தார். ஆண்டவரைத் துதிப்போம்.

# வேதாமத்தில் அறிவியல்

*Science in Bible*

## பூமியில் மட்டும் தான் உயிர் வாழ முடியும்

1969 ஆம் ஆண்டு நீல் ஆம்ஸ்ட்ராங் என்ற விண்வெளி வீரர் முதன் முதலாக சந்திர மண்டலத்தில் கால் வைத்தார். எப்படியாவது பூமியை தவிர வேற்று கிரகத்தில் உயிர் வாழ முடியுமா? என்று பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றது. அதில் ஒன்றுதான் சந்திரனில் உயிர் வாழ முடியுமா? என்று சந்திரனுக்கு சென்று ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இது தவிர செவ்வாய் கிரகத்திலும் வாழ முடியுமா? என்ற ஆராய்ச்சிகள் பல நடந்து வருகின்றன. எல்லா அறிஞர்கள் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் பூமிதான் வாழுவதற்கு ஏற்ற இடம் என்று ஒத்துக்கொள்கிறார்கள். இந்த கருத்தை கி.மு.680 வருடங்களுக்கு முன்பு வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது.

**“வானங்களை சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை**



**உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர்.” (ஏசாயா 45:18)**

## பூமி உருண்டை

பூமி தட்டை என்று எண்ணப்பட்டது. ஆனால் இன்றைய உலகத்தில் உள்ளவர்களுக்கு பூமி உருண்டை என்று தெரியும். எல்லோருக்கும் தெரிந்த ஒரு அறிவியல் உண்மை. இந்த உண்மையை கி.மு.680 வருடங்களுக்கு முன்பே வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது.

**அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர். (ஏசாயா 40 : 22)** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மழை பொழியும் விதம்

நிலத்தில் உள்ள தண்ணீரை சூரியன் வெப்பத்தினால் உறிஞ்சி மேகங்களில்

சேர்க்கப்பட்டு, மேகங்கள் ஒன்று சேர்ந்து மழையாய் பொழிகிறது. இந்த கருத்தை கி.மு.2000 வருடங்களுக்கு முன்பதாகவே வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது.

**"அவர் நீர்த்துளிகளை அணுவைப் போல ஏறப்பண்ணுகிறார். அவைகள் மேகத்திருந்து மழையாய்ச் சொரிகிறது. அதை மேகங்கள் பெய்து, மனுஷர்மேல் மிகுதியாய்ப் பொழிகிறது." (யோபு 36:27,28)**

## ஹெலிகாப்டர்

வேதாகமத்தில் அநேக தீர்க்கதரிசனங்கள் இன்று பயன்படுத்தப்படும் ஹெலிகாப்டர்கள், போர் விமானங்கள், டாங்கிகள் குறித்து



கூறப்பட்டிருக்கிறது. **வெளி. 9 : 2 – 10** வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வெட்டுக்கிளியும், நவீன ரக போர் விமானங்களையும், ஹெலிகாப்டர்களையும் குறிப்பிடுவனவென்று வேத வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் அவ்வசனங்களை வாசித்துப் பாருங்கள். வெட்டுக்கிளிகளைப் பற்றி கூறாமல் துன்பப்படுத்துகிற கொலை கருவிகளாக கூறப்படுகிறது. யோவானுக்கு

தேவன் வெளிப்படுத்தும் போது, அவர் காலத்தில் போர் விமானங்களும் ஹெலிகாப்டர்களும் இல்லாததால் அவருடைய அறிவின்படி பெரிய வெட்டுக்கிளிகளாக காட்டுகிறார்.

## பீரங்கி டாங்கிகள்



அதே அதிகாரத்தில் யோவான் மற்றொரு அடையாளத்தை காட்டுகிறார். குதிரை வீரர் என்று குறிப்பிடுவதே நவீன ரக பீரங்கிகளை குறிப்பிடுவதாக வேத வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர் (**வெளி. 9 : 16-19**).

குதிரை வீரர் என்று குறிப்பிட்டிருந்தாலும், குதிரைகளின் வாயிருந்து புகையும் கந்தகமும் புறப்பட்டன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சிங்கங்களின் தலைகொப்பாக இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், இன்றுள்ள பிரங்கிகளைக் குறிக்கிறது. அந்தக் (யோவான்) காலத்தில் பீரங்கிகள் இல்லாததால், குதிரை, சிங்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## இந்த ஊழியத்திற்கு உங்கள் கைகளை இணையுங்கள்



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே! இயேசு கிறிஸ்துவின் இனிதான பெயரிலே வாழ்த்துகிறோம்.

## அவர் வருவாரா?

- நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவின் வருகை மிக சமீபமாயிருக்கிறப்படியால், அவர் வருவாரா என்ற தலைப்பில் கர்த்தருடைய வருகைக்கான அடையாளங்களை வீடியோ தொகுப்பு மற்றும் யூடியுப் மூலமாக மக்களை ஆயத்தப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இதற்காக ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம்.

## கெரோஸ் ஒரு நாள் சிறப்புக் கூட்டங்கள்

- கர்த்தருக்குச் சித்தமானால் 2024 ஆகஸ்ட் 15ம் தேதி அரசு விடுமுறையானதால் அன்று இளம் வாலிபர் மற்றும் வாலிபர்களுக்கு சிறப்பு கூடுகை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இதற்காக உங்களது ஜெபம் தேவை. இன்றைய சூழலில் வாலிபர்கள் வழிவிலகி போகிறதைக் காண்கிறோம். நமது பிள்ளைகளை கிறிஸ்துவுக்குள் வழிநடத்த இந்த கூடுகை மிகவும் உதவியாக இருக்கும். எங்கே நடத்த உள்ளோம் என்பதை அடுத்த இதழில் தெரிவிக்கிறோம்.

# நீதிமொழிகள் இன்று என்ற படவிளக்கத்துடன் வேத வசன விளக்கம்

➠ நீதிமொழிகள் இன்று என்ற படவிளக்கத்துடன் வேத வசன விளக்க செய்திகள் யூடியுப் மூலமாக தினந்தோறும் நீதிமொழிகளின் ஒரு வசனத்திற்கான விளக்கமாக 31 வீடியோக்கள் வெளியிட்டுள்ளோம். மேலும், பிரசங்கி புத்தகத்தின் விளக்கமும் 3 பகுதிகளாக வெளியிட்டுள்ளோம். இதன் மற்றப் பகுதிகள் விரைவில் வெளியிட உள்ளது. இதற்காக ஜெபியுங்கள். மாற்றத்திற்கான விதை என்று கிறிஸ்தவ உலகத்தில் ஏற்பட வேண்டிய மாற்றத்தைக் குறித்து சகோ. யோவானும் மற்றும் சகோ. சாம்ராஜ் ஹாப்பர் அவர்களும் சிந்திக்கும் வகையில் உரையாடியுள்ளார்கள். இவைகளெல்லாம் Anchor Ministriesன் யூடியுப் சானலில் வெளியிட்டுள்ளோம். காணுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

Channel: https://bit.ly/anchorministries

அன்பானவர்களே! இன்னும் அனேக தரிசனங்களைத் பிதாவாகிய தேவனும், நமதாண்டவர் இயேசுவும் தந்து வருகிறார். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைந்து இன்னும் அநேகரை இரட்சிப்புக்குள் நடத்துவும், கர்த்தருடைய வருகைக்கு அநேகரை

ஆயத்தப்படுத்தவும் கிருபைகளும், வரங்களினால் நிறைத்து நடத்துவராக. நங்கூரம் ஊழியங்களின் கூட்டங்களுக்காகவும் ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம். ஊழியங்களில் எங்களோடு ஈடுபட விரும்பினால், உங்களை அன்புடன் அழைக்கிறோம். இணைந்து தேவனுடைய இராஜ்யத்திற்கு ஒரு கூட்ட மக்களைச் ஆயத்தப்படுத்துவோம். நமது ஊழியத்தைத் தாங்க உங்களை அன்புடன் அழைக்கிறோம். ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

## தொடர்புக்கு

**Bro. Yovan Gandhi R**
No.6, Shantha Villa,
Jayanthi Nagar 2nd Cross Street,
Radhakrishna Nagar, Kolathur,
Chennai 600099.
**GPay Phone:** 9840872799
**GPay UPI:**
anchorministries.in-1@oksbi
**GPay Scan Code:**

Bank Account Details
**Account Name:**
Yovan Gandhi R
**Bank :**
State Bank of India
**Savings Account No.**
40104379956
**Branch :** Tambaram, Chennai
**IFSC Code :**
SBIN0001243

Anchor Ministries stands to spread the Good News of the Kingdom of God. We reach Teens, Youth and Families through God's Word. We mould individuals to grow in Christ and become leaders.

ஜெப உதவிக்கும் ஆலோசனைக்கும்

**Call 9840872799**

**Website : www.anchorministries.in**
**E-mail : contactus@anchorministries.in**
**anchorministries.in@gmail.com**